Registered as a Newspaper | பக்கங்கள் 12 | விலை ரூ. 50


# உதயன்

சுடர் : 39
கதிர் : 52

புதன்கிழமை
17 ஜனவரி 2024

தை 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"எல்லா அதிகாரத்தையும் பிடுங்கிப்போட்டு இப்ப பழியை இஞ்சால போடுகினம் பாருங்கோ"

# '13' பலவீனப்படுத்தியது தமிழ்க் கட்சிகளே!

## அமைச்சர் விஜயதாஸ குற்றச்சாட்டு



**யாழ்ப்பாணம், ஜனவரி 17**

**தமிழ்க் கட்சிகளால்தான் '13'ஆவது திருத்தம் பலவீனமடைந்தது. '13'ஆவது திருத்தம் தற்போது வழங்கும் அதிகாரங்களைக்கூட தமிழ்க் கட்சிகள் சரிவரப் பயன்படுத்தவில்லை என்பதே உண்மை - இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.**

11




## பசுக்களுக்கு நீதிகோரி யாழில் நேற்றுப் போர்!

யாழ்ப்பாணம், ஜன. 17
மட்டக்களப்பு, மயிலத்தமடு மேய்ச்சல் தரவையில் இடம்பெற்றுவரும் அத்துமீறிய நில ஆக்கிரமிப்பு மற்றும் பசுவதைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

11

## பசுக்கள் மீதான வதைகளை அனுமதிக்கின்றனர் பிக்குகள்

### ஈ.சரவணபவன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 17
மயிலத்தமடுவில் முன்னெடுக்கப்படும் பசுவதைக்கு ஆதரவாகச் செயற்படுவதை பௌத்த பிக்குகள்

11

## பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறுவேன்

வீரசேகர வெருட்டு

விரிவு பக். - 11

## வருட இறுதியில் தேர்தல் உறுதி!

### ஜனாதிபதி ரணில் 'பிளான்' விஜயதாஸ வெளிப்படை!

யாழ்ப்பாணம், ஜன. 17
வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாகவுள்ளார் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

11

## மயிலத்தமடு எங்கிருக்கிறது?

### நீதியமைச்சர் கேட்டாரே ஒரு கேள்வி

யாழ்ப்பாணம், ஜன. 17
மயிலத்தமடுவில் சிங்களப் பேரினவாத அடக்குமுறைக்கு எதிராகப் பண்ணையாளர்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்திவரும் நிலையில், 'மயிலத்தமடு எங்கிருக்கின்றது?' என்று வியப்புடன் கேட்டுள்ளார்

11

இறங்குதுறைச் சர்ச்சை

## வலி.தென்மேற்கு சபையை முற்றுகையிட்டு போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 17
காக்கைதீவு இறங்குதுறையை, 'சாவற்கட்டு துறைமுகம்' என்று பெயரிடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையை முற்றுகையிட்டு காக்கைதீவு மீனவர்களால்

11

## பட்டமளிப்பு பிற்போடல்!

யாழ்ப்பாணம், ஜன. 17
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா நடைபெறும் திகதிகள் பிற்போடப்பட்டுள்ளன.

11

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
14 EDITION
JITF 2024
JANUARY ஜனவரி
19 20 21
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort) முற்றவெளி மைதானம்
இன்னும் 2 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல்தரவை இல்லாததால் கால்நடை வளர்ப்போர் சிரமம்!



கிளிநொச்சி, ஜன.17

**கிளிநொச்சி, அக்கராயனில் மேய்ச்சல்தரவை இல்லாததால் கால்நடை வளர்ப்பாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

சிறுபோக நெற்செய்கைக் காலத்தில் அக்கராயன்குளத்தின் பின்பகுதியில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவது வழமை. ஆனால் காலபோகச் செய்கைக் காலத்தில் குளத்தின் நீர்மட்டம் அதிகரித்திருப்பதால் கால்நடைகளை அங்கு மேய்ச்சலில் ஈடுபடுத்த முடியாது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் தீர்மானத்தின் படி, திருமுறிகண்டி, அக்கராயன், வன்னேரிக்குளம் வீதிக்கு அருகில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்த முடியும். ஆனால் இந்த வீதியின் இரு பகுதிகளிலும் மக்கள் வசிப்பதாலும், விவசாயம் மேற்கொள்வதாலும் அங்கு கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது.

அக்கராயன் பகுதி கால்நடை வளர்ப்பாளர்கள் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்கான மேய்ச்சல் தரவையை அதிகாரிகள் இனங்காட்டவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-13)



## கௌதாரிமுனை வீதியை திருத்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.17

பூநகரி, கௌதாரிமுனை வீதியை நிரந்தரமாகச் சீரமைத்துத் தரவேண்டும் என்று கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"கௌதாரிமுனைக் கிராமத்தில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பேருந்து ஒன்றே சேவையில் ஈடுபடுகின்றது. பரமன்கிராய் சந்தியிலிருந்து கௌதாரிமுனை வரையான 20 கிலோமீற்றர் வீதி தற்காலிக வீதியாகவே காணப்படுகின்றது. பல இடங்களில் வீதியை மேவி கடல்நீர் உட்புகுவதால் குண்டும் குழியுமாகவே வீதி காணப்படுகின்றது.

கௌதாரி முனையில் இருந்து பூநகரி பிரதேச மருத்துவமனைக்கே நோயாளர்கள் வரவேண்டியிருக்கின்றது. வீதி சீரின்மையால் கர்ப்பிணிப் பெண்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இந்த வீதியை நிரந்தரமாகச் சீரமைத்தால் போக்குவரத்து இலகுவாக இருக்கும். அத்துடன் கௌதாரிமுனையில் இருந்து கடல் உணவுகளை பூநகரிக்கு இலகுவாக எடுத்துவரமுடியும்.

பூநகரிப் பிரதேசசெயலகத்தில் கடந்தகாலங்களில் நடந்த கூட்டங்களில் இது தொடர்பாகச் சுட்டிக்காட்டியிருந்தபோதும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த வீதியைச் சீரமைத்துத் தர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-13)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.17

பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாசாலையில் அறநெறிப் பாடசாலை சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு அதிபர் தி.மோகனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் நலன்விரும்பிகள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்று வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் பொதுச்செயலாளர் எஸ்.கே.தளையரட்ணம் அறிவித்துள்ளார். (ஏ-இ)

## பஸ் நிலையங்களை கவனிக்காத பஸ்கள்

### நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை



கிளிநொச்சி, ஜன.17

ஏ-32 வீதியில் உள்ள பூநகரி பஸ் நிலையம் மற்றும் முழங்காவில் பஸ் நிலையம் என்பவற்றுக்கு பஸ்கள் வருவதில்லை என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்ற னர்.

வீதியால் பயணிக்கும் பஸ்கள், பஸ் நிலையத்துக்குள் வருவதில்லை. இது தொடர்பாக பூநகரிப் பிரதேசசபையால் கடந்த காலங்களில் வடபிராந்திய போக்குவரத்து சபை, மாவட்டச் செயலாளர் உட்பட சகல தரப்பினருக்கும் கடிதங்கள் வழங்கப்பட்டன. ஆனால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணம், பூநகரி, மன்னார் வீதியில் பயணிக்கும் பஸ்கள், பஸ் நிலையத்துக்கு வந்து செல்லவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)

## உயிர்வாழ்நிலை சான்றிதழ் பதிவு

தென்மராட்சிப் பிரதேச செயலக ஓய்வூதியர்களின் 2024ஆம் ஆண்டுக்கான உயிர்வாழ் நிலை சான்றிதழுக்கான பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டுக்கு முன்பு ஓய்வு பெற்றவர்கள் தமது பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்திலும், 2016 ஆம் ஆண்டு தொடக்கம் ஓய்வு பெற்றவர்கள் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளிலும் தமது கையொப்பத்தைப் பதிவு செய்யவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## ஐ.எம்.எப். குழுவினருடன் அரசு கலந்துரையாடல்



கொழும்பு, ஜன.17

சர்வதேச நாணயநிதியப் பிரதிநிதிகள் மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கு இடையிலான உத்தியோகபூர்வ கலந்துரையாடல் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆறு உறுப்பினர்களைக் கொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் மின்சாரசபை, மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

அண்மையில் ஜனாதிபதியை சந்தித்த சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் பொருளாதார மறுசீரமைப்புகளை மேற்கொள்வதில் இலங்கை அடைந்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துக்கு பாராட்டுகளைத் தெரிவித்திருந்தனர்.

இலங்கைக்கு வந்துள்ள சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் நாளைமறுதினம்வரை நாட்டில் தங்கியிருப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

## லலித் ஜயசிங்கவுக்கு பிணை அனுமதி

கொழும்பு, ஜன.17

சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவை பிணையில் செல்ல மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அனுமதித்தது. சப்ரகமுவ மாகாணத்தின் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றம் 5 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது.

இரத்தினபுரியில் அரசியல் நிகழ்வொன்றில் கலந்து கொண்டவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவை கைது செய்வதைத் தவிர்க்கவேண்டும் என்று கஹவத்தை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு செல்வாக்குச் செலுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இந்தத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பில் ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அவரைப் பிணையில் செல்ல அனுமதித்துள்ளது. (ஏ-இ)

புத்தரின் அவதாரம்

## விளக்கமறியல் நீடிப்பு

'அவலோகிதீஸ்வரபோதி சத்துவர்' (புத்தரின் மறு அவதாரம்) எனத் தன்னை அறிமுகப்படுத்தி புத்தபெருமானையும், துறவிகளையும் பௌத்த மதத்தையும் அவமதிக்கும்வகையில் கருத்துக்களைத் தெரிவித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை எதிர்வரும் 24ஆம் திகதி விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புத்த பெருமானையும், பிக்குகளையும், பௌத்த மதத்தையும் அவமதிக்கும் வகையில் பிரசங்கங்கள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் பணச் சலவைச் சட்டம் மற்றும் பொது ஒழுங்கை மீறியமை தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரிநிலுவை அறவீட்டை கணக்கெடுக்காத அரசு!

## சாதாரண மக்களுக்கே நெருக்கடி சாடுகின்றார் பாட்டலி சம்பிக்க

**கொழும்பு, ஜன.17**

**சர்வதேசநாணயநிதியத்தின்நிபந்தனைகளைநடைமுறைப்படுத்துவதாகக் கூறும் அரசாங்கம், பிரதான நிபந்தனையான ஒரு இலட்சம் கோடி ரூபா நிலுவைவரியை அறவிடுவதைப் புறக்கணித்து வருகின்றது என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2019 ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் 69 இலட்சம் மக்கள் செய்த தவறால் ஒட்டுமொத்த மக்களும் தற்போது நெருக்கடிக்குள்ளாகியுள்ளார். முறையற்ற நிர்வாகத்தால் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ள ராஜபக்சக்கள் அரசியலில் இருந்து முழுமையாக புறக்கணிக்கப்படவேண்டும். வர்த்தகர்கள், அரசியல் செல்வாக்கு உள்ளவர்களிடமிருந்து மதுவரித் திணைக்களம், தேசிய இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் என்பன சுமார் ஒரு இலட்சம் கோடி ரூபா வரியை அறவிடவில்லை. இந்த நிலுவை வரியை அறவிட அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அரசாங்கம் சர்வதேச நாணயநிதியத்தின்நிபந்தனைகளில் தெரிவுசெய்யப்பட்ட சிலவற்றையே செயற்படுத்துகிறது. நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் விடயங்கள் மாத்திரம் செயற்படுத்தப்படுகின்றன. வங்குரோத்து நிலையிலும் செல்வந்தர்களுக்கு விசேட சலுகை வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ஏ-இ)

## மின்சாரம் தாக்கி மாணவன் உயிரிழப்பு

கொழும்பு, ஜன.17

மாணவர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் ரத்தோட்டைப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

மாணவன் இளநீர் பறிக்கமுயன்றபோதே மின் தாக்கத்துக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர் கம்மதுவையைச் சேர்ந்த 16 வயதுடையவர் என்றுபொலிஸார்தெரிவித்தனர். (ஏ-இ)

## யுக்திய சோதனையில் 877 பேர் கைது

கொழும்பு, ஜன.17

நாடளாவிய ரீதியில்முன்னெடுக்கப்படும் 'யுக்திய' நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 877 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

475கிராம்ஹெரோயின், 501கிராம் ஐஸ் மற்றும் 126 போதை மாத்திரைகள்என்பனவும்கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஏ-இ)

## முறையற்றவிதத்தில் 'வற்' அறவிட்டால் நடவடிக்கை

கொழும்பு, ஜன.17

முறையான வழிமுறைகள் இல்லாமல் 'வற்' வரி அறவிடும் தரப்பினருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வாடிக்கையாளரிடமிருந்து நேரடியாக 'வற்' வரி அறவிடும் உரிமை வியாபாரிகளுக்குக் கிடையாது என தேசிய இறைவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பில் தேசிய இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் சேபாலிகா சந்திரசேகர தெரிவித்ததாவது-

வரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு சில வியாபாரிகள் பொருள்களின் விலைப்பட்டியலுடன் 'வற்' வரியை நேரடியாக அறவிடுவதை அவதானிக்க முடிகிறது. முறையான வழிமுறைகள் இல்லாமல் 'வற்' வரி அறவிடும தரப்பினருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வாடிக்கையாளரிடமிருந்து நேரடியாக 'வற்' வரி அறவிடும் உரிமை வியாபாரிகளுக்குக் கிடையாது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்கள் இறைவரித் திணைக்களத்தின் cgir@ird.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக முறையிடலாம் - என்றார். (ஏ-இ)

## பொதுவேட்பாளராக ரணில் ஐ.தே.கட்சியினர் தீர்மானம்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தேசிய பொதுவேட்பாளராகக் களமிறங்கவேண்டும் எனக் கட்சியின் மாவட்ட மட்டங்களில் தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை, அம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலேயே இந்தத் தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேவேளை ரணில் விக்கிரமசிங்க பொதுவேட்பாளராக களமிறங்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக்குழு மற்றும் செயற்குழு என்பனவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. (ஏ-44)

## சிறைச்சாலைகளில் கடும் இடநெருக்கடி!

கொழும்பு, ஜன.17

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் எண்ணிக்கையில்கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் சிறைச்சாலைகளில் கடும் இடநெருக்கடி மற்றும் வசதிக்குறைபாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் தொகை 232 வீதமாக அதிகரித்துள்ளது என சிறைகளில் சன நெரிசலை நிர்வகிப்பதற்கான செயற்றிறன் கணக்காய்வு அறிக்கை தெரிவித்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 53 வீதமான கைதிகள் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில்சிறைத்தண்டனைபெற்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறைக்கைதிகளை நிர்வகிப்பதற்காக அரசாங்கம் ஆண்டுதோறும் 800 கோடி ரூபாவுக்கு அதிகளவான தொகையைச் செலவிடுகின்றது என்றும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ-இ)




மழை விட்டும் தூவானம் விடாத கதை மாதிரி, தைப்பொங்கல் முடிஞ்ச பிறகும் கன இடங்களில பொங்கல் திருவிழா இன்னும் முடிஞ்சபாடில்லை. பெரும்பாலான அரசாங்க ஒப்பீஸ்களில நேற்றுச் செவ்வாய்க்கிழமை பொங்கிப் படைச்சுப் போட்டுத்தான் வேலையளைத் தொடங்கினவை. என்னதான் இங்கிலிஷ் வருசப்பிறப்பை ஜனவரி முதலாம் திகதி கொண்டாடி இருந்தாலும், தமிழர்களுக்கு முந்த நாள் பொங்கலோடதான் புது வருசம் தொடங்கியிருக்கு. அதாலதான் தமிழ் ஆக்கள் வேலை செய்யிறஎல்லா ஒப்பீஸ்களிலையும், நேற்றைக்கு பொங்கலோட வேலையளைத் தொடங்கினவை. வடக்கில இப்பிடி எல்லா ஒப்பீஸ்களிலயும் புக்கையும், வடையுமா கொண்டாட்டத்தில இருக்க, கைதடியில இருக்கிற வடக்கு மாகாண சபையில மட்டும் ஒரு சிலமனையும் காணேலை.

வடக்கில உள்ள எல்லா டிப்பார்ட்மெண்டுக்கும் தலை மாதிரி இருக்கிற மாகாணசபை அலுவலகத்தில ஏன் நேற்றுப் பொங்கேலை? எண்டு பட்சி மெல்ல விசாரிச்சுப் பார்த்திச்சு. அங்க இருபதாம் திகதிதான் பொங்கலாம். அப்ப ஏன் நேற்றுப் பொங்கேலை? இருபதாம் திகதிதான் நல்ல நாளோ? வடமாகாணப் பொங்கல் விழாவே நேற்றுபூநகரியிலபுதிர்எடுத்துக்கொண்டாடேக்க, மாகாணசபை அலுவலகத்தில மட்டும் கொண்டாட ஏலாதோ? எல்லாத்துக்கும் பின்னால ஒரு காரணம் இருக்கு. வடக்கு மாகாண பிரதம செயலாளர் இப்ப இஞ்ச இல்லை. அவரின்ர பிள்ளைக்கு போனகிழமை அநுராதபுரத்தில கலியாணவீடு. அதுக்காக அவர் லீவில நிக்கிறார். இருபதாம் திகதி மட்டிலதான் ஆள் லீவு முடிஞ்சு வருவார். அதால தான் அண்டைக்குப் பொங்குவம் எண்டு எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கினமாம்.

ஒரு இடத்தில பொறுப்பானவர் இல்லையெண்டாலோ, லீவில நிண்டாலோ அதுக்கு அடுத்த பதவியில உள்ளவை ஒரு வேலையைச் செய்துமுடிக்கிற மாதிரி, இந்தப் பொங்கலையும் பிரதம செயலாளருக்கு அடுத்த நிலையில இருக்கிற ஒப்பீஸர்மார் பொங்கிப் படைச்சுக் கொண்டாடியிருக்கலாம். ஆனால் அப்பிடிக் கொண்டாடினால், 'தன்னை மதிக்காமல் பொங்கல் கொண்டாடினீங்களோ?' எண்டு பிரதம செயலாளர் கோவிச்சாலும் எண்டுதான் ஒருத்தரும் இந்தப் பொங்கல் விசயத்தில தலையைப் போடாமல் வேடிக்கை பார்த்திருக்கினம். கிட்டத்தட்ட இதுவுமொரு 'வாளி வைப்புத்தான்' கண்டியளோ.




padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிப் போட்டியிலிருந்து பின்வாங்கிய விவேக் ராமசாமி



நியூயோர்க், ஜன.17

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து விலகிக் கொள்வதாக இந்திய வம்சாவளியான விவேக் ராமசாமி அறிவித்துள்ளார்.

குடியரசுக் கட்சியின் வேட்பாளரைத் தேர்வுசெய்ய நடந்த அயோவா மாகாண தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்தே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

"நான் இன்றிரவு இந்த உண்மையை ஏற்றுக் கொள்கிறேன். இது கடுமையாகவே இருக்கிறது. ஆனாலும் ஏற்கிறேன். இன்று மக்களை ஆச்சரியப்படுத்தும் முடிவை எதிர்பார்த்தோம். அது கிட்டவில்லை" என்று அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டிறுதியில் நடைபெறவுள்ளது. குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் தேர்வில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப், நிக்கி ஹாலே, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாமி அதில் போட்டியிடவிருந்தனர். குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளரைத் தேர்வுசெய்யும் காகஸ் என்ற மாகாண அளவிலான உள்கட்சித் தேர்தல் தொடங்கியது. அந்தத் தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

51.9 சதவீத வாக்குகளுடன் டொனால்ட் ட்ரம்ப் முன்னிலை வகிக்கிறார். ப்ளோரிடா ஆளுநர் ரான் டேசாண் டிஸ் 20.7 சதவீத வாக்குகளுடன் இரண்டாம் இடத்திலும், தெற்கு கரோலினா ஆளுநர் நிக்கி ஹேலி 19 சதவீத வாக்குகளுடன் மூன்றாம் இடத்தில் உள்ளனர். விவேக் ராமசாமி 7.7 சதவீத வாக்குகளும், அர்கான்ஸஸ் முன்னாள் ஆளுநர் அஸா ஹட்ஷின்சன் 0.2 சதவீத வாக்குகளும் பெற்றுள்ளனர். இந்தப் பின்னடைவை தொடர்ந்தே அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான போட்டியில் இருந்து விவேக் ராமசாமி விலகியுள்ளார். "தேர்தலில் டொனால்ட் ட்ரம்புக்கு ஆதரவு வழங்குவேன்" - என்றும் அவர் அறிவித்துள்ளார். (எ-இ)

## புருணேக்கு செல்லும் சிங்கப்பூர் ஜனாதிபதி

சிங்கபூர்சிட்டி, ஜன.17

சிங்கப்பூர் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள தர்மன் சண்முகரத்னம் முதல் உத்தியோகபூர்வ பயணமாக எதிர்வரும் 24 ஆம் திகதி புருணே செல்லவுள்ளார். அங்கு 26ஆம் திகதி வரை தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புருணே சுல்தான் ஹசனல் போல்கியாவின் அழைப்பின் பேரில் சிங்கப்பூர் ஜனாதிபதி அங்கு செல்கின்றார். (எ-இ)

## மரக்கறி விலைகள் 'கிடு கிடு'

கொழும்பு, ஜன.17

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறி விலைகள் உச்சம் தொட்டுள்ளன.

கரட் ஒரு கிலோ ஆயிரத்து 750 ரூபா முதல் 2 ஆயிரம் ரூபாவரையில் நேற்று விற்பனை செய்யப்பட்டது.

அத்துடன் ஏனைய மரக்கறி விலைகளும் அதிகரித்துள்ளன. மரக்கறிகள் இதுவரை இந்தளவு விலை உயர்ந்ததில்லை என்று நுகர்வோர் கூறுகின்றனர். (எ-இ)

## நீண்ட ஓவியம் வரைந்து சாதனை படைத்த பெண்

பீஜிங், ஜன.17

சீனப் பெருஞ்சுவரின் மேல் உலகின் மிக நீளமான ஓவியத்தை வரைந்து பெண் ஓவியர் உலக சாதனை படைத்துள்ளார்.

சீனாவைச் சேர்ந்த குவோ ஃபெங் என்ற பெண் ஓவியர், உலக சாதனை வரலாற்றில் தனது பெயரைப் பதிவு செய்துள்ளார்.

உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட சீனப் பெருஞ்சுவர், உலகின் ஏழு அதிசயங்களில் முதன்மையானதாகக் காணப்படுகின்றது. சீனாவின் மலைகளுக்கு இடையே நீண்டதாகக் கட்டப்பட்ட சீனப் பெருஞ்சுவர் அந்நியப் படையெடுப்பை சீனாவுக்குள் அனுமதிக்கக் கூடாது என்ற பாதுகாப்பு நோக்கத்துக்காகக் கட்டப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இதற்கான கட்டுமானப் பணிகள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டன. அதன் நீளம் தற்போது 21 ஆயிரத்து 190 கிலோ மீற்றர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

குவோ ஃபெங் சீனப் பெருஞ்சுவரின் மேல் 60 நாள்களுக்கு மேலாக அமர்ந்து தனது கலைப்படைப்பை ஆயிரத்து 14 மீற்றர் நீளமுள்ள கேன்வாஸில் வரைந்து சாதனை படைத்துள்ளார். (எ-இ)





## மறையாத சூரியன்

ரோம், ஜன.17

இத்தாலி நாட்டிலுள்ள விக்னெல்லா எனும் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் மறையாத செயற்கைச் சூரியனைக் கண்டுபிடித்துள்ளனர். விக்னெல்லா கிராமத்தில் நவம்பர் 11 முதல் பெப்ரவரி 2 வரையில் சூரிய ஒளி மிகவும் குறைவாகவே இருக்குமாம். இதனால் விக்னெல்லா கிராமத்தில் இருக்கும்பொழுது ஏதோ அந்தாட்டிக்காவில் இருப்பதைப் போன்ற உணர்வு ஏற்படுமாம். இந்தக் கிராமத்தில் பல நூற்றாண்டுகளாகவே சூரியன் மறைந்து இரண்டரை மாதங்களுக்குப் பிறகுதான் மறுபடி தோன்றுமாம்.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் விதமாகவே கிராமத்து மக்கள் செயற்கைச் சூரியனை நிர்மாணித்துள்ளனர். 2005ஆம் ஆண்டு ஒரு கோடி ரூபா திரட்டப்பட்டு, ஊருக்கு எதிரில் உள்ள மலையில் பிரமாண்ட கண்ணாடி அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மலையின் மீது 40 சதுர மீற்றரும் 1.1 தொன் எடையும் கொண்ட கண்ணாடியை ஆயிரத்து 100 மீற்றர் உயரத்தில் நிறுவினர்.

குறைவான சூரியஒளியானது உயரமான இடத்தில் உள்ள கண்ணாடி மீது பட்டுத் தெறிப்பதால் 2006 ஆம் ஆண்டு விக்னெல்லா கிராமம் முழுமையான சூரியஒளியைப்பெற ஆரம்பித்தது. கிராம மக்களின் இந்தச் செயற்றிட்டம் அனைவரும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளது. (எ-இ)

## டெல்லியை மூடிய பனி

புதுடில்லி, ஜன.17

கடும் குளிர் காரணமாக மூன்றாவது நாளாகவும் நேற்று வடஇந்தியாவின் பெரும்பாலான பகுதிகளை அடர்ந்த மூடுபனி சூழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மூடு பனி நிலைமை விமானசேவையை மாத்திரமன்றி, ரயில் போக்குவரத்தையும் பாதித்துள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான பயணிகள் விமான நிலையம் மற்றும் ரயில் நிலையங்களில் மணிக்கணக்கில் காத்திருந்தனர்.

புதுடில்லியில் கடும் பனிமூட்டம் நிலவியதால் குளிர் நிலை நீடித்தது. மூடு பனி காரணமாக புதுடில்லியிலிருந்து புறப்படும் சுமார் 30 விமான சேவைகள் தாமதித்தன. 17 விமானசேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 30 ரயில்கள் தாமதமாக டெல்லியைச் சென்றடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத் துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்புண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். முக்கியமான பிரமுகர்களின் தொடர்பு கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்ய வேண்டி வரும். சிலருக்குத் தெய்வ வழிபாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். அரசாங்க அதிகாரிகளின் அறிமுகத்தால் ஆதாயமும் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். தாய்மாமன் வழியில் ஆதாயம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# நீதியும் குழப்பமும்

ஒரு நாட்டின் நல்லாட்சிக்கும், அங்கீகாரத்துக்கும் சட்டவாட்சி சீராக நடக்கவேண்டும். நாட்டின் அனைத்துக் குடிமக்களுக்கும் சட்டம் சமமாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். சட்டவாட்சி ஒழுங்கான முறையில் கடைப்பிடிக்கப்படாவிட்டால், சீராகச் செயற்படுத்தப்படாவிட்டால் அங்கு ஒரு குழப்ப நிலைமை தொடர்ந்துகொண்டே இருக்கும். இலங்கையின் நிலைமையும் அதுதான்.

இலங்கையைப் பொறுத்தவரையில் சட்டம் பெரும்பான்மையினத்தவர்களுக்கு ஒரு வகையாகவும், சிறுபான்மையினருக்கு ஒருவகையாகவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது கண்கூடு. ஆட்சியில் இருப்பவர்கள் அதை மறுத்தாலும் குருந்தூர்மலை விவகாரம் முதல் இப்போது மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல்தரை விவகாரம் என அண்மையகால உதாரணங்கள் ஏராளம் இருக்கின்றன. குருந்தூர்மலையில் சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்பட்ட விவகாரத்திலும், மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரை விவகாரத்திலும் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளைகள் உதாசீனம் செய்யப்பட்டிருக்கின்றன. நீதிமன்றக் கட்டளைகளை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் மௌனமாக வேடிக்கை பார்க்கின்றனர். நீதிமன்றக் கட்டளைகளை உதாசீனம் செய்த பெரும்பான்மையினத்தவர்கள் தண்டிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட தரப்பான சிறுபான்மையினர் சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்த்து ஏமாந்துபோயிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, 'நீதிமன்றக் கட்டளைகளை எவராவது மதிக்காவிட்டால் அவர்களைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு இருக்கின்றது, அதனால் சட்ட நடவடிக்கையில் பாரபட்சம் என்பதை ஏற்கமுடியாது' என்று கூறியிருக்கின்றார். ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள நம்பிக்கையீனமே பிரச்சினைகளுக்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச கூறுவது உண்மையே. நீதிமன்றக் கட்டளைகளை மீறினால் தண்டிக்கப்படவேண்டும் என்பதும் உண்மையே. ஆனால் அத்தகைய நீதிமன்ற உத்தரவுகள் அரசாங்கத்தாலும், அரச ஆதரவு பெற்றவர்களாலும் சர்வசாதாரணமாகத் தூக்கியெறியப்படுவதுதான் இங்குள்ள பிரச்சினை என்பதை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச போன்ற பெரும்பான்மையின அரசியல்வாதிகள் புரிந்துகொள்ளவேண்டும்.

சிறுபான்மையின மக்கள் தங்கள் இறுதி நம்பிக்கையாக இருந்த நீதிமன்றங்களின் மீதுகூட இப்போது அவநம்பிக்கை கொள்ளும் நிலைமையே இருக்கின்றது. தங்கள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக நீதிமன்றங்களை நாடியும் மாற்றம் எதுவும் நடந்துவிடப்போவதில்லை என்ற எண்ணம் சிறுபான்மை மக்களின் மனங்களில் ஆழப்பதிய ஆரம்பித்திருக்கின்றது. நீதிமன்றக் கட்டளையை மீறுவோர் தண்டிக்கப்படவில்லை என்றால், அதற்கான காரணம் என்ன? இந்தக் கேள்விக்கான விடைகளையும் தீர்வுகளையும் தேடினால் மட்டுமே நீதியமைச்சர் விஜயதாஸ கூறும் 'ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை கொள்ளும் சூழல்' உருவாகும். துரதிர்ஷ்டவசமாக தெற்கு அரசியல்தலைவர்கள் எவரும் இதற்கு விடைதேடி - தீர்வைக்காண முயலவில்லை. ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டித் தப்பிக்கொள்ளும் மனப்பாங்கைக் களைந்து எப்போது அடிப்படைப் பிரச்சினையை இனங்கண்டு தீர்வுதேட முயல்கின்றார்களோ, அப்போதே நாட்டில் உள்ள அனைத்துக் குழப்பங்களும்தீர்ந்துபோகும். அதுவரை இந்தநாட்டில் குழப்பங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கும்.






# 'யுக்திய' நடவடிக்கை; நாட்டுக்குச் சிக்கல்!

## திஸ்ஸ அத்தநாயக்க எச்சரிக்கை

**கொழும்பு, ஜன.17**

**'யுக்திய' நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய சர்வதேச தலையீடுகளைத் தவிர்ப்பதற்கு முழு அரசாங்கமும் பொலிஸாரும் கவனமாகச் செயற்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் ஏற்கனவே யுக்திய தொடர்பாகக் கவனம் செலுத்தியுள்ளதால், இந்த நடவடிக்கை மிகவும் கவனமாக கையாளப்படவேண்டும். இது மனித உரிமை மீறலுக்கு வழிவகுத்துள்ளது என்று ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் ஏற்கனவே கரிசனை வெளிப்படுத்தியுள்ளது. இது நாட்டுக்கு புதிய பிரச்சினையை ஏற்படுத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களை பிடிப்பது நல்லது என்பதால் யுக்திய நடவடிக்கையை நாங்கள் எதிர்க்கமாட்டோம். எனினும், இது நாட்டுக்குப் புதிய பிரச்சினையாக மாறக்கூடாது. அதை அரசியல் கருவியாகப் பயன்படுத்தக்கூடாது என்றும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (எ-இ)

# உலகம் சுற்றும் ரணில்

கொழும்பு, ஜன.17

ஜனாதிபதி ரணில் உகண்டாவுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உகண்டா தலைநகர் கம்பாலாவில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி தனது சுவிட்ஸர்லாந்து பயணத்தைத் தொடர்ந்து அங்கிருந்து உகண்டாவுக்குச் செல்வார் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

# வினாத்தாள் 'அவுட்' போட்டியே காரணம்

கொழும்பு, ஜன.17

மேலதிக வகுப்புகளுக்கு மாணவர்களை அதிகளவில் இணைத்துக்கொள்ளும் நோக்கில் பரீட்சை வினாத்தாள்களை ஆசிரியர்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிடுகின்றார்களா என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள போட்டிகளின் அடிப்படையில் சில ஆசிரியர்கள் இது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இது பாரதூரமான விடயமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (எ-இ)

# நாடாளுமன்ற நடவடிக்கை 24ஆம் திகதியுடன் நிறைவு

கொழும்பு, ஜன.17

நாடாளுமன்ற நடவடிக்கை எதிர்வரும் 24ஆம் திகதி நிறைவுறுத்தப்படவுள்ளது என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்பின்னர் அடுத்தமாதம் 7ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் நிறைவுறுத்தப்பட்ட பின்னர் கோப், கோபா உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட நாடாளுமன்றக் குழுக்களும் கலைக்கப்படும்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை நாட்டின் பிரதான கட்சிகள் ஆரம்பித்துள்ள நிலையில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர் ஒருவராக களமிறங்க உள்ளார்.

நாட்டு மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சில அறிவிப்புகளை வெளியிடுவதற்காகவே, நாடாளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுக்கு கொண்டுவர ஜனாதிபதி உத்தேசித்துள்ளார் என்று ஆளுங்கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிகிறது. (எ-இ)

**நாளை**

18.01.2024

**வியாழக்கிழமை**

**தை 04**

சுபநேரம் : 08.05 - 09.35

ராகுகாலம் : 02.05 - 03.35

**நாளொரு நல்வார்த்தை**

**மற்றவர்களிடம் அன்பு செலுத்துவதற்கு, நீங்கள் முதலில் உங்களை நேசிக்க வேண்டும்.**

**- லியோ பஸ்காக்லியா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நகர அழகுபடுத்தலுக்கு 600 மில்லியன் ரூபா நிதி!

நூறு நகரங்களை அழகுபடுத்தும் திட்டத்துக்கென இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த நிதி மூலம் 9 திட்டங்களின் பணிகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அதிகாரசபை தெரிவித்துள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனைக்கு அமையவே இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (எ-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 06 . 1935



மறைவு 14 . 01 . 2024

### அரியகுட்டி நவரட்ணம்

கட்டுடையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி நவரட்ணம் கடந்த (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கௌதமி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்), கஜபரன் (லண்டன்), புராதனி (லண்டன்), செந்தூரன் (கணக்காளர் AMT, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆ.மோகனசுந்தரம் (இளைப்பாறிய ஆசிரியர், குப்பிளான்), வினோதினி (லண்டன்), சு.சிவகீதன் (லண்டன்), நிஷாந்தி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுமங்கலி, சாரிணி, பகவான், கஜானனி, கஜானன், பிரணவி, கீர்த்தினி, அபிஷன், அக்ஷானி, அக்ஷயன், டிலக்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2024) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அளவெட்டி மேற்கு. குடும்பத்தினர்
077 210 3739, 077 713 8388

(CS 53563) (N-1)


# மாதிவெல வீட்டுத்தொகுதியை ஆக்கிரமித்துள்ள வெளியாள்கள்

கொழும்பு, ஜன.17

மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீட்டுத் தொகுதியில் பாதியளவு வெளியாள்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது என நாடாளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் என சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் இந்தக் குடியிருப்பு களில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பில் இருந்து வெகு தொலைவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர் குடியிருப்புகள் வழங்கப்படுவதுடன் இந்த வீடுகளை பராமரிக்க அரசாங்கம் வருடாந்தம் பல கோடி ரூபாவைச் செலவிடுகின்றது. வெளியாள்களுக்கு வீடுகள் வழங்கக் கூடாது என எத்தனை சுற்றறிக்கைகள் கொடுத்தாலும், வீடுகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன எனக் கூறும் அந்த வட்டாரங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்மதத்தின் பேரில் இவர்கள் தங்கியுள்ளதால் வெளியாள்களை அகற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 30 . 03 . 1936



மறைவு 15 . 01 . 2024


எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர்
திருமதி ரேவதி குமரசிறி அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர் **இளையதம்பி செல்வராசா**
(இளைப்பாறிய மருந்துக் கலவையாளர்)
அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஆசிரியர் கழகம்
யா/ நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை



## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 12 . 1933



மறைவு 16 . 01 . 2024

### சின்னத்தம்பி கணேசன்

(ஓய்வு நிலை பிரதம முகாமைத்துவ உதவியாளர், ஓய்வூதியத் திணைக்களம், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்)

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கு, பெரிய கோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணேசன் அவர்கள் நேற்று (16.01.2024) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான சின்னத்தம்பி சின்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வரும், அமரர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், அமரர்களான குமாரசாமி சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், அமரர் முகுந்தனின் பாசமிகு தந்தையும், திரிபுரசுந்தரியின் பெரிய தந்தையாரும், கதிர்காமநாதனின் அன்பு மாமனாரும், அமரர் சுப்பிரமணியம், ஈஸ்வரதாஸன், சோமசுந்தரம், அமரர் கற்பகம்மை, அசலாம்பிகை ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2024) புதன்கிழமை மீசாலையிலுள்ள அவரது இல்லத்தில் காலை 07.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: த.கதிர்காமநாதன் (மருமகன்)
மீசாலை கிழக்கு, மீசாலை. 075 557 9529



## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 01 . 1949



மறைவு 16 . 01 . 2024

### சண்முகலிங்கம் இராசம்மா

அளவெட்டி, செட்டிச்சோலையைப் பிறப்பிடமாகவும், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் இராசம்மா அவர்கள் நேற்று (16.01.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமி சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லாச்சி தம்பதியரின் மகளும், பரமசாமி கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், இளையதம்பி, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரபாகரன் (சுவிஸ்), சுபாஜினி (லண்டன்), கிருசாந்தி (மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு தாயாரும், சிவநேஸ்வரி, மகாதேவன், நிர்மலகாந்தன் ஆகியோரின் மாமியும், பவிஸ்ஜா, லதீசன், சிவஹரினி, கனிஷா, ரதிக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2024) வியாழக்கிழமை ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் திருநெல்வேலி உயரப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. 077 071 2560

(CR 41566) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

# Jaffna International Trade Fair

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

14th EDITION

JITF 2024

## JANUARY ஜனவரி

**19 | 20 | 21**


10.00 மு.ப - 8.00 பி.ப

**Muttraweli Grounds**

(Next to Jaffna Fort)

**முற்றவெளி மைதானம்**

(யாழ் கோட்டைக்கு அருகில்)




Automobile | Construction | Consumer Goods | Apparel
Hospitality | Agriculture | Travel & Tourism | IT | Education
Beverage, Packaging Industry and many more...

PLATINUM SPONSOR: DIMO THE PERFECT PARTNER

GOLD SPONSORS: ADRIAN SOLAR GREEN | NIPPON CEMENT

ORGANIZED BY: LECS LANKA EXHIBITION

IN ASSOCIATION WITH: CCIY

OFFICIAL SPONSORS: PRINT MEDIA: உதயன் | RADIO: அரியான் FM | TELEVISION: Capital | CITY HOTEL

SILVER SPONSORS: Anchor | SOORYA | Hayleys Solar | Rumeco | Arevei Skin Naturals | TJC Mango | Darley Butler | Elephant House | Keells Krest | PHOENIX | RHINO 60 YEARS | CBL Sera

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com | www.jitf.lk | jitf.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
14 . 04 . 1941

மறைவு
17 . 01 . 2023



## கதிரேசு கணேசமூர்த்தி

**திதி: தேய்பிறை ஏகாதசி (05.02.2024)**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டு பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா!
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

இல.88, மரக்காரம் பளை வீதி,
நெளுக்குளம்,
வவுனியா.

(CS53534) (N.1)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

தமிழர் திருநாளான தைத்திருநாளை முன்னிட்டு...

**புதிய வகை தெரிவுகளுடன்**

# வாணி ரெக்ஸ்

- ***Jacket*** (ஆண் / பெண் / சிறுவர்கள்)
- கோட் சூட் (ஆண் / பெண்)
- ***Sweatter*** வகைகள்
- பிளாங்கற் வகைகள்
- ***Cap*** / மௌப்ளர் வகைகள்
- ***Luggage Bag***
- நுளம்பு வலை (Mosauto Net)



**மற்றும்**

- திருமண பட்டுச்சாறி வகைகள்
- பூப்புனித நீராட்டு விழா சாறி வகைகள்
- பிறந்தநாள் விழாக்களுக்கான பாட்டிபுறக் மொடல் கவுண் வகைகள்
- அரச, தனியார் ஊழியர்களுக்கான யூனிபோம் சாறி வகைகள்
- இந்தியாவில் இருந்து உடனுக்குடன் வெளிவந்த ஒன்லைன் சாறிகள்
- புதிய வகை சல்வார் / லெகிங்கா / மஸ்தானி வகைகள்
- ஆண்களுக்கான/ சிறுவர்களுக்கான புத்தம் புதிய ஆடைகள்

**அனைத்தையும்**
**விலைக்கழிவுடன்** பெற்றுக்கொள்ள.....

# வாணி ரெக்ஸ்

No-81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5578, 021 222 9286, 077 748 8093

## மரண அறிவித்தல்



### சொர்ணபவானி சண்முகலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை - செங்குந்தா இந்துக்கல்லூரி மற்றும் முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சொர்ணபவானி சண்முகலிங்கம் நேற்று (16.01.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், குந்தவி, குருபரன், குமுதினி, மற்றும் பவதாரணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபேந்திரன், உஷா, குருபரன், ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜனனி, ஷிவானி, குமரன், அபிராம், அஸ்வின், வைஷ்ணவி, ஆரபி, ஆரதி, தேஜஸ்வினி, ஷர்ஷினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2024) புதன்கிழமை 120/3, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

120/3, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
**021 222 9707**

தகவல்:
**குழந்தை ம.சண்முகலிங்கம்**
(கணவர்)

(CS53568) (N-1)

## மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 05 . 1948

இறப்பு
14 . 01 . 2024



### திருமதி கமலாசனி திருநடனசிவம்

கரவெட்டி மத்தொனியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாசனி திருநடனசிவம் கடந்த (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.
அன்னார் கணபதிப்பிள்ளை திருநடனசிவம் அவர்களின் பாசமிகு மனைவியும், நிருசனின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற Dr.க. சுப்பையா மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் மருமகளும், மகாதேவா (கனடா), மகாதேவி (இலங்கை), மகேந்திரராஜன் (கனடா), மங்களேஸ்வரி (கனடா), தெய்வநாயகி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கமலரதி (கனடா), உதயசங்கர் (கொழும்பு), மனோராணி (கனடா), இராஜசிங்கம் (கனடா), சண்முகலிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற ஐ. சிற்றம்பலம், இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் பெறாமகளும், சோதிமலர் (லண்டன்), காந்திமலர் (லண்டன்), ஆனந்தசிவம் (உடுப்பிட்டி), பாஸ்கரசிவம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சர்வேஸ்வரன் (ஈசன்), அம்பிகாவரன் (கனடா), காலஞ்சென்ற புவனேஸ்வரி (புவனம் ரீச்சர்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், ரஜீவா (கொழும்பு), மயூரா (கனடா), நிவேதன் (கனடா) ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், சரண்யா (கனடா), சிவானு (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், Dr. சிவசுதன் (சிவா, லண்டன்), சிவைகுகன் (குகா, சிங்கப்பூர்), சிறீசிவை (கொழும்பு), சிவதர்மன் (முருகா, லண்டன்) ஆகியோரின் பாசமிகு சிறியதாயாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரவெட்டி, மத்தொனி சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**தகவல்:** திருநடனசிவம் கரவெட்டி - 077 210 5969
நிருசன் - (கனடா) - 437 450 6247
மகாதேவி-(கொழும்பு) - 077 729 8873
மகாதேவா (கனடா) - 905 492 9457
மகேந்திரராஜன் (கனடா)- 416 283 5933
மங்களம் (கனடா) - 416 698 7932
தெய்வா (கனடா) - 416 661 6247

கரவெட்டி மத்தொனி

(CS 27677) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுகாதாரசேவைகள் ஊழியர் போராட்டத்தால் நெருக்கடி!

## களமிறக்கப்பட்ட இராணுவம்; ஏமாற்றமடைந்த நோயாளர்கள்

கொழும்பு, ஜன.17

**நாடளாவிய ரீதியில் சுகாதாரசேவைகள் ஊழியர்கள் நேற்று அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தநிலையில் சுகாதார சேவைகள் தடையின்றி வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக நாட்டின் பல மருத்துவமனைகளில் இராணுவத்தினர் களமிறக்கப்பட்டனர்.**

72 சுகாதாரநிபுணர் சங்கங்கள் இணைந்து நேற்றுக்காலை 6.30 மணி முதல் 24 மணிநேர அடையாள பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தன.

மருத்துவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கத் தீர்மானிக்கப்பட்ட 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தங்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்று தெரிவித்தே அவர்கள் இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். மருத்துவமனைகளுக்கு முன்பாக சுகாதாரசேவை ஊழியர்களால் கவனவீர்ப்புப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் பணிப்புறக்கணிப்பு காரணமாக வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் சுகாதார சேவைகள் பாதிப்படைந்தன. பெரும்பாலான மருத்துவமனைகளில் அவசர சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்துச்சேவைகளும் தடைப்பட்டன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மருத்துவமனைகளில் மருத்துவ சேவைகள் தடைப்பட்டதால், சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் சென்ற நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்ததுடன், ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல நேரிட்டுள்ளது.

அதேவேளை, சுகாதாரசேவை ஊழியர்களின் போராட்டத்தால் ஏற்படும் சவால்களைச் சமாளிப்பதற்காக இலங்கை இராணுவம் பல இடங்களில் களமிறக்கப்பட்டது. இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவின் வழிகாட்டுதலின் பேரில் பாதுகாப்பு அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க படையினர் மருத்துவமனைகளில்நிலைநிறுத்தப்பட்டனர் என்று இலங்கை இராணுவம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவமனை, கண்டி பொது மருத்துவமனை, களுபோவில போதனா மருத்துவமனை, பேராதனை போதனா மருத்துவமனை, மாத்தளை மாவட்ட மருத்துவமனை, குருநாகல் போதனா மருத்துவமனை மற்றும் மொனராஹல, நுவரெலியா, பதுளை, அம்பாந்தோட்டை, பலாங்கொடை, திஸ்ஸமஹார, தெபரவெவ உள்ளிட்ட பல அரச மருத்துவமனைகளில் இராணுவத்தினர் களமிறக்கப்பட்டனர். (எ-110-113-213)

# குடியிருப்புகளில் டெங்குக் குடம்பிகள்

## சட்ட நடவடிக்கைக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ். மாநகரசபைக்குட்பட்ட நாவாந்துறைப் பிரதேசத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்புச் சோதனை நடவடிக்கையின் போது ஆறு குடியிருப்புகளில் நுளம்புக் குடம்பிகள் இருந்தது கண்டறியப்பட்டது.

இந்தக் குடியிருப்புகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இந்தப் பிரதேசத்தில் 171 வீடுகள் தரிசிக்கப்பட்டன. இதில் போதியளவு சுகாதார வசதிகள் இன்றி 16 குடியிருப்புகள் காணப்பட்டன. இந்தக் குடியிருப்புகளை உடனடியாக துப்புரவு செய்யக் கோரி சிவப்பு அறிவித்தலும் வழங்கப்பட்டது. தொடர்ந்து இன்றும் நாவாந்துறைப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புச்செயற்பாடுகள் மற்றும் குடியிருப்புகளை சோதனை செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று சுகாதாரப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். (எ-17)



# வெற்றுக்காணிகளை துப்புரவாக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ்ப்பாணம், நாவாந்துறைப் பிரதேசத்தில் பயன்பாடின்றியுள்ள 20 வரையிலான வெற்றுக்காணிகள் இனங்காணப்பட்டுள்ளன. அந்தக் காணிகளை உடனடியாகத் துப்புரவு செய்யக்கோரி சிவப்பு அறிவித்தல் பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறான காணிகளால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. காணிகளை உடன் துப்புரவு செய்ய, காணி உரிமையாளர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென நேற்றுமுன்தினம் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். (எ-17)

# இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், ஜன.17

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் இலட்சார்ச்சனை உற்சவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. எதிர்வரும்25ஆம்திகதிவியாழக்கிழமைவரை லட்சார்ச்சனை உற்சவம் நடைபெறவுள்ளது. (எ-66)

# கள் விற்பனை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன.17

பனம் மற்றும் தென்னம் கள் விற்பனை பெரும் வீழ்ச்சியை அடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பனம், தென்னங்கள்ளுக்கு முன்னர் கிராக்கி காணப்பட்டது. தற்போது கள் உற்பத்தி அதிகரித்திருந்தாலும் விற்பனையில் வீழ்ச்சி காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கள் விற்பனை வீழ்ச்சியால் இந்தத் தொழிலை நம்பி வாழும் அங்கத்தவர்களின் வாழ்வாதாரமும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-17)

# நிர்வாக கிராமஅலுவலர்; 6 பேருக்குப் பதவியுயர்வு

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் வெற்றிடமாக காணப்பட்ட நிர்வாக கிராம அலுவலர் பதவிகளுக்கு உடனடியாக நடைமுறைப்படுத்தும் வகையில் ஆறு பேருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 12 நிர்வாக கிராமஅலுவலர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றன. முதற்கட்டமாக மூன்று பதில் நிர்வாக கிராமஅலுவலர்களுக்கும், மூன்று மூத்த கிராமஅலுவலர்களுக்கும் நிர்வாக கிராம அலுவலர் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பதில் நிர்வாக கிராமஅலுவலராக கடமையாற்றிய த.அருந்தவச்செல்வன் கரவெட்டி பிரதேச செயலகத்துக்கும், வேலணைப் பிரதேச செயலகத்தில் பதில் நிர்வாக கிராமஅலுவலராக கடமையாற்றிய இ.யோகேஸ்வரன் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்கும், கரவெட்டி பிரதேசசெயலகத்தில் பதில் நிர்வாக கிராமஅலுவலராக கடமையாற்றிய சி.வித்தியாபதி கோப்பாய்ப் பிரதேச செயலகத்துக்கும், உடுவில் பிரதேச செயலக கிராம அலுவலர் பொ. ஜெயகரன் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலக கிராம அலுவலர் திருமதி ம.மாலாதேவி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கும், கோப்பாய்ப் பிரதேச செயலக கிராமஅலுவலர் சி.எழிலரசன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி, சங்கானை, காரைநகர், நெடுந்தீவு, மருதங்கேணி, வேலணை ஆகிய பிரதேச செயலகங்களில் நிர்வாக கிராமஅலுவலர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றன. (எ-9)

# கீரைக்கு மவுசு

தென்மராட்சிப் பிரதேச சந்தைகளில் கீரை வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறைந்தளவு கீரைகளே சந்தைக்குக் கொண்டுவரப்படுவதால் ஒருபிடி கீரை 250 ரூபாவாகவும், பொன்னாங்காணிக்கீரை 150 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

2022ஆம் ஆண்டு பெய்த மழையால் கீரைப் பாத்திகள் அழிவடைந்த நிலையில், கடந்த ஆண்டு விவசாயிகள் கீரை பயிரிடுவதில் ஆர்வம் காட்டவில்லை. அதனாலேயே கீரை விலை உயர்ந்துள்ளது. தற்போது விவசாயிகள் கீரைச்செய்கையை ஆரம்பித்துள்ளதால், எதிர்வரும் நாள்களில் அதன் விலைகுறைவடையலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-9)

# 34 கிலோ கேரளக்கஞ்சா புங்குடுதீவில் சிக்கியது

யாழ்ப்பாணம், ஜன.17

புங்குடுதீவில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் 34 கிலோ கேரளக்கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

புங்குடுதீவு கடற்கரையில் புதருக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சாக்குடையில் பொதியிடப்பட்ட நிலையில் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி ...ர் 13 மில்லியன் ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது. கைப்பற்றப்பட்ட கஞ்சா சட்ட நடவடிக்கைக்காக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (எ-26)


# கடை உடைத்து திருட்டு

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளவெட்டி மலைவேம்படியில் வலி.வடக்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கும் பலசரக்குக் கடை ஒன்று உடைக்கப்பட்டு பணம், பொருள்கள் திருடப்பட்டுள்ளன. பொங்கல் காரணமாக கடை பூட்டப்பட்டிருந்த நிலையில், கடையை உடைத்து ஒரு தொகைப் பணமும், சிகரெட், பீடிகள் என்பனவும் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு மாகாண புதிர் எடுத்தலும், தைப்பொங்கல் விழாவும் நேற்றுக்காலை கிளிநொச்சியில் நடைபெற்றது. பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல்லவராயன்கட்டு மாதிரிக் கிராமத்தில் சிறிநாக பூஷணி அம்பாள் ஆலய வளாகத்தில் நிகழ்வு இடம்பெற்றது. வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (எ-27)



யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பொங்கல் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. (எ-26)

# கச்சதீவுத் திருவிழா: ஏற்பாடுகள் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 17

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் பெப்ரவரி 23 மற்றும் 24ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள நிலையில், திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பில் கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தில் களஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு பங்குத்தந்தை பரமதாஸ் பத்திநாதன், நெடுந்தீவு பிரதேசசெயலர் எஸ்.சத்தியஜோதி மற்றும் இலங்கை கடற்படை உயர் அதிகாரிகள், கடற்படையினர் கச்சதீவுக்கு நேற்றுப் படகில் சென்றுள்ளனர். அங்கு திருவிழாவுக்கு வரும் பக்தர்களுக்கான தங்குமிடம், குடிதண்ணீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அத்துடன், ஆலயத்தில் செய்யப்பட வேண்டிய கட்டுமானங்கள் மற்றும் மறுசீரமைப்புகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ-ம-100)



வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையில் நேற்றுமுன்தினம் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இணைந்து சம்பிரதாயபூர்வமாகப் பொங்கலில் ஈடுபட்டனர். (எ-125)



தைப்பொங்கல் திருநாளில் யாழ். குடாநாட்டில் 5 ஆயிரம் மரங்களை நடும் திட்டம் மருத்துவர் சந்திரகுமார் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. எஸ்.ரி.எஸ் மருத்துவமனையின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறையில் உள்ள 250குடும்பங்களுக்கு 500 தென்னை மரங்கள் வழங்கப்பட்டன. (எ -20)

# கிணற்றுக்குள் இருந்து பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

கிணற்றுக்குள்ளிருந்து குடும்பப் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தனங்களப்புப் பகுதியில் நேற்று நண்பகல் இந்தத் துயரச்சம்பவம் இடம்பெற்றது.

சாவகச்சேரி, நுணாவில் மத்தியைச் சேர்ந்த கி.சத்திய ராணி (வயது- 32) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-159)

## மரண அறிவித்தல்



**ஜோர்ஜ் மேரி திரேசா**

நாரந்தனையை பிறப்பிடமாகவும் பெரியவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோர்ஜ் மேரி திரேசா அவர்கள் 16.01.2024 செவ்வாய் கிழமை இன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் விக்ரோறியா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற ஜோர்ஜ் அவர்களின் அன்பு மனைவியும் அன்ரனிராஜா (அவுஸ்ரேலியா), தேவதாசன், ஜெயராஜ் (லுதுவேனியா) விமலராஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் அனற் ஜெயந்தி, ஜெயந்தி, ரஜனி ஆகியோரின் மாமியாரும் நிறோசனா, நிதர்சனா, நிர்ஜா, வினோத், அலக்ஸ் நிறோஜன், சஞ்ஜித், காவியா, அக்சயா ஆகியோரின் பேர்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடன் பெரியவிளானில் உள்ள அவரது இல்லதிலிருந்து (17.01.2024) புதன்கிழமை பி.ப 3:00 மணியளவில் எடுத்து செல்லப்பட்டு பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித யுவானியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**குடும்பத்தினர்.**

**விமல்ராஜ் மகன் 077 711 0028**
**வினோத் பேரன் 074 049 5708**

## பெயர் மாற்றம்

படித்த மகளிர் திட்டம் மிருசுவிலில் வசிக்கும் **செல்வரத்தினம் தங்கம்மா** ஆகிய நான் எனது பெயரை **செல்வரத்தினம் தங்கமலர்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **செல்வரத்தினம் தங்கமலர்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs.53410) (N.1)

செல்வரத்தினம் தங்கமலர்

## பெயர் மாற்றம்

124, A.V றோட், அரியாலையில் வசிக்கும் **ஐயாத்துரை நிமலதாஸ்** ஆகிய நான் எனது பெயரை **ஐயாத்துரை நாதன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஐயாத்துரை நாதன்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோஷலிஸ குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**ஐயாத்துரை நாதன்**

(CS 27878) S-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






நிதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச உதயன் அலுவலகத்துக்கு நேற்று மாலை பயணம் மேற்கொண்டார். உதயன் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் அவரை வரவேற்றார். உதயன் பணியாளர்கள் மற்றும் ஆசிரிய பீடத்தினருடனும் அவர் கலந்துரையாடலில் ஈடுபட்டார். (ம)

## '13' பலவீனப்படுத்தியது...

'உதயன்' பணிமனைக்கு நேற்று மாலை வருகைதந்த அவர், செய்தியாளர்களின் சந்திப்பிலும் கலந்துகொண்டார். இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'13'ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்கள் போதாது என்றும், கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றன. ஆனால், '13'ஆவது திருத்தத்தில் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைக்கூட தமிழ்க் கட்சிகள் உரியமுறையில் சரிவரப் பயன்படுத்தவில்லை என்பதே உண்மை. உதாரணமாக க.வி.விக்னேஸ்வரன் வடமாகாண முதலமைச்சராக இருந்தபோது, அவருக்கும் இதர உறுப்பினர்களுக்கும் இடையிலான கருத்துமோதல்களுக்கும் அரசியல் முரண்பாட்டுக்கும்தான் தமிழ்க்கட்சிகள் முக்கியத்துவம் வழங்கிச் செயற்பட்டனவே அன்றி, '13'ஆவது திருத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையாவது உரிய முறையில் பயன்படுத்த எத்தனிக்கவில்லை. இதனால்தான் வடக்கு மாகாணத்துக்காக மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி, செலவிடப்படாமல் மீளத்திரும்பியது. கிழக்கு மாகாணத்திலும் இதே போன்றதொரு நிலையே இருந்தது. ஆக, இருக்கும் அதிகாரங்களைக்கூட சரிவரப் பயன்படுத்தாமலிருந்துவிட்டு கூடுதல் அதிகாரங்களைத் தாருங்கள் என்று கேட்பது பொருத்தமற்றது - என்றார். (அ-ம)

## பசுக்கள்...

முதலில் நிறுத்தவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ் தரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் வலியுறுத்தியுள்ளார்.

மயிலத்தமடு, மாதவனையில் சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பாளர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் பசுவதைக்கு எதிராக யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் நேற்று இடம்பெற்ற போராட்டதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கும் கிழக்கும் எப்பொழுதும் உணர்வுபூர்வமாக இணைக்கப்பட்ட ஒன்று. தமிழர்களுடைய போராட்டம் சதி செய்து மௌனிக்கப்பட்டதனைப் போன்று வடக்கும் கிழக்கும் மௌனிக்கப்பட்டன.

இலையானை அடித்தாலே பாவம் என்று சொல்லுகின்ற பௌத்த பிக்குகள் பசுக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வதைகளுக்கு ஆதரவாகச் சென்று கொண்டிருக்கின்றார்கள். அவர்களை இந்த நாட்டில் தட்டிக் கேட்பதற்கு எவரும் இல்லை. பொலிஸார்கூட அவர்களைக் கட்டுப்படுத்துவது கிடையாது. இலங்கையில் எதுவும் பாரபட்சமாகவே இடம்பெறும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிரூபித்தவண்ணமுள்ளார். கால்நடைகளுக்கு இழைக்கப்படும் துன்பங்களை நிறுத்தக்கோரியும் தங்களின் உரிமைகளை வலியுறுத்தியும் அந்தப் பகுதி மக்கள் மாதக்கணக்கில் போராட்டம் நடத்துகின்றனர்.

இலங்கைப் பொலிஸாரும் அனைத்து அரசாங்க மட்டங்களும் தமிழர்களுக்காக நீதியை நிலைநாட்ட எப்போதும் பின்னிற்கின்றன. 2015ஆம் ஆண்டுமுதல் மயிலத்தமடு விவகாரம் பேசப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு மக்களுக்கு உங்களின் உறவுகளான வடக்கு மக்கள் எப்போதும் உடனிருப்பார்கள் என்ற செய்தியை இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் பதிவுசெய்கின்றோம் - என்றார். (அ-ம-125-66)

## வலி.தென்மேற்கு...

நேற்றுக்காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காக்கைதீவு இறங்குதுறை காக்கைதீவு மற்றும் சாவற்கட்டு மீனவர்களுக்குப் பொதுவான துறையாக இருந்து வருகின்றது. எனினும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இருந்து சாவற்கட்டு மீனவர்களுக்கு என தனிச்சந்தையும், காக்கைதீவு மீனவர்களுக்கென தனிச்சந்தையும் அருகருகே இயங்கிவருகின்றன. இரண்டு சந்தைகள் தேவையில்லை என்றும் ஒரு சந்தையே போதுமானது என்றும் காக்கைதீவு மீனவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இரண்டு சந்தை நிலைப்பாட்டால் மீன் விற்பனையில் மீனவர்களுக்கு இடையே பிணக்குகள் ஏற்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறிருக்கையில், காக்கைதீவு இறங்குதுறையில் 'சாவற்கட்டு துறைமுகம்' என்று பெயரிட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காக்கைதீவு மீனவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கையால் தங்களின் இருப்பு இல்லாதுபோகும் என்று தெரிவித்த காக்கைதீவு மீனவர்கள், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் முன்பாக அமர்ந்து பிரதேசசபையின் வாயில்களை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவற்கட்டில் இருந்த எம்மை 1983ஆம் ஆண்டில் மாதிரிக் கிராமத் திட்டத்தின் கீழ் காக்கைதீவில் குடியேற்றினார்கள். அன்றுமுதல் இங்குதான் புயல், மழை, வெள்ளம், வெயில் என எத்தனையோ இடர்பாடுகளைத் தாண்டி வாழ்ந்து வருகின்றோம். இவ்வாறிருக்கையில் இறங்குதுறைக்கு சாவற்கட்டு துறைமுகம் என்று பெயரிடுவதால் எமது அர்ப்பணிப்பும், கடந்தகால வாழ்வும் அர்த்தமற்றுப்போகும். எனவே இதற்கு நாம் உடன்படமாட்டோம் என்று காக்கைதீவு மீனவர்கள் தெரிவித்தனர்.

மீனவர்களின் கருத்துக்குப் பதில் வழங்கிய வலிகாமம் தென்மேற்குப் பிரதேச பையின் செயலாளர், பெயர்ப்பலகை வைத்தமை தவறுதான். ஆனால், இது நாங்கள் மட்டும் எடுத்த முடிவு அல்ல. இரு பிரிவாக இருக்கும் மீனவர்களை சாவற்கட்டு மீனவ சங்கத்தின் கீழ் உள்ளீர்க்கும் நடவடிக்கை தீர்மானிக்கப்பட்ட போது நீங்களும் அதற்கு உடன்பட்டீர்கள். பிரதேச செயலகம், கடற்றொழில் திணைக்களம் என பலதரப்பட்டவர்களுடன் இணைந்தே இது தீர்மானிக்கப்பட்டது. அனைவருடனும் கலந்துரையாடியே மீண்டும் தீர்மானம் எடுக்கமுடியும். தன்னிச்சையாகத் தீர்மானிக்கமுடியாது என்று தெரிவித்தார். (அ-ம-125)

## மயிலத்தமடு...

விஜயதாஸ ராஜபக்ச, 'உதயன்' அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, மயிலத்தமடுவில் இடம்பெறும் மிருகவதை, காணி ஆக்கிரமிப்பு, சிங்கள - பௌத்த பேரினவாத அடக்குமுறைகள் தொடர்பிலும், குருந்தூர்மலை விவகாரம் தொடர்பிலும், நாட்டிலிருந்து நீதிபதியொருவர் வெளியேறிச் செல்லுமளவுக்கு அதிகரித்துள்ள அடக்குமுறைகள் தொடர்பிலும் நீதியமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் வினாத் தொடுத்தனர். அப்போதே ஊடகவியலாளர்களிடம் 'மயிலத்தமடுவா? அது எங்கே எங்கிருக்கின்றது?' என்றவாறாகக் கேட்டுள்ளார் அமைச்சர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; குருந்தூர்மலை தொடர்பான விடயங்களை அறிந்தே வைத்திருக்கின்றேன். உண்மையில் சில அரசியல்வாதிகள்தான் இந்த விடயத்தைப் பதற்றமான நிலைக்குள் இட்டுச் செல்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாகச் செயற்பட்ட ரி.சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றமைக்கு அரச அழுத்தங்கள் காரணமல்ல. அந்தத் தகவல்கள் பொய்யானவை. உண்மையில் தனது குடும்பத்திலுள்ள பிரச்சினையால்தான் அவர் நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றார். இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு அனைத்துத் தகவல்களும் சேகரிக்கப்பட்ட பின்னரேயே உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன். அவருக்கு அச்சுறுத்தல் என்றால், அந்த அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு அவருக்கு அதிகாரமிருந்தது. அந்த அதிகாரத்தைப்பயன்படுத்தி அவர் தன்னைத் தற்காத்துக் கொண்டிருக்கலாம். அல்லாதுவிடில் இந்த விடயத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் பலவற்றை முன்னெடுத்திருக்கலாம். அதையெல்லாம் விடுத்து அவர் அச்சுறுத்தலால்தான் நாட்டைவிட்டு வெளியேறினார் என்று தெரிவிப்பது உண்மையுமில்லை - என்றார். (அ-ம)

## பெரமுனவிலிருந்து...

ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலான விடயங்களுக்கு பெரமுன ஆதரவு வழங்குமானால், கட்சியிலிருந்து நிச்சயம் வெளியேறுவேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நான் பொதுஜன பெரமுனக் கட்சியில்தான் இப்போதும் இருக்கின்றேன். செய்நன்றிக் கடனுக்காகக் கட்சியில் தொடர்கின்றேன். பெரமுனதான் எனக்கு வேட்புமனு வழங்கியது. கொழும்பு மாவட்டத்தில் 3 இலட்சத்துக்கும் அதிக வாக்குகளைப் பெற்றேன். தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பிடித்தேன். கட்சி வீழ்ந்திருக்கும் நேரத்தில் அதை விட்டுவிட்டு செல்வது நல்லதல்ல. எனினும், நாட்டைப் பிளவுபடுத்தும் நடவடிக்கைகளுக்கும், இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும், ஒற்றையாட்சிக்கு எதிரான விடயங்களுக்கும் கட்சி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரவு வழங்கினால் அதன் பின்னர் கட்சியில் இருக்கமாட்டேன்' - என்றார். (அ-ம-44)

## பசுக்களுக்கு...

தமிழர் ஒருங்கிணைந்த கட்டமைப்பின் ஏற்பாட்டில், நல்லை ஆதீனத்துக்கு முன்பாக நேற்று மாலை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

மயிலத்தமடுவில் எமது பசுக்களையும், காளைகளையும் துன்புறுத்துவதை உடனடியாக நிறுத்து!, வாயில்லா ஜீவன்களுக்கு வாயில் வெடி வைக்கும் கொடூரத்தை நிறுத்து!, பசுக்களை தெய்வமாக வழிபடும் நாங்கள் உணவின்றி பசுக்கள் படும் துன்பத்தை இனியும் சகியோம்! உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிவகுரு ஆதீன குருமுதல்வர், மதகுருமார்கள், வேலன் சுவாமிகள், அகில இலங்கை சைவ மகாசபையினர், நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், பொ.கஜேந்திரகுமார், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சுரேஷ்பிரேமச்சந்திரன், மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் உட்பட பலரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-125)

## பட்டமளிப்பு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவை மார்ச் மாதம் 14, 15, 16ஆம் திகதிகளில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், தற்போது பெப்ரவரி மாதம் 6, 7, 8ஆம் திகதிக்கு பட்டமளிப்பு பிற்போடப்பட்டுள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படுவதில் உள்ள தாமதமே பட்டமளிப்பு விழா பிற்போடப்படக் காரணம் என்று அறிய முடிகிறது. (அ-ம-125)

## வருட...

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதில்தான் ஜனாதிபதி தற்போது தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றார். தேர்தல் தொடர்பாக நகர்வுகள் இரண்டாம் பட்சமானவைதான். ஆனால், எதிர்வரும் ஒக்ரோபர் அல்லது நவம்பர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் அலுவலகத்தை தரைமட்டமாக்கிய ஈரான்

தெஹ்ரான், ஜன.17

ஈராக்கில் உள்ள இஸ்ரேலிய இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவுத் தலைமையகம் மீது மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைத் தாக்குதலுக்கு ஈரான் இராணுவம் உரிமை கோரியுள்ளது.

புலனாய்வு நிலையங்கள் மற்றும் பிராந்தியத்தில் ஈரான் எதிர்ப்பாளர்கள் கூடும் பகுதிகளை இலக்கு வைத்து ஏவுகணைத் தாக்குதல்களை ஈரான் இராணுவம் நடத்தியுள்ளது என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சியோனிஸ்ட் அரசாங்கத்தின் சமீபத்தைய அநீதிகளுக்குப் பதிலடியாக ஈராக்கின் குர்திஸ்தானில் உள்ள மொசாட்டின் புலனாய்வு அலுவலகம் ஏவுகணைகளால் அழிக்கப்பட்டது எனத் தெரிவித்துள்ள ஈரான் இராணுவம், தியாகிகளின் இரத்தத்தின் கடைசித் துளிகளுக்குப் பதில் வாங்கும்வரை தாக்குதல் தொடரும் என்றும் தெரிவித்துள்ளது. அதேவேளை, ஈரானின் இந்தத் தாக்குதலை அமெரிக்கா கண்மூடித்தனமான நடவடிக்கை என வர்ணித்துள்ளது. (ஏ-இ)

## வயோதிபப் பெண் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, ஜன. 17

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட தேவிபுரம் வயல்வெளிப் பகுதியிலிருந்து வயோதிபப் பெண்ணொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.

மார்க்கண்டு பாக்கியம் என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)

## மயிலத்தமடுவில் கறுப்புப் பொங்கல்

மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்கள், விவசாய அமைப்பினர்கள் ஆகியோர் இணைந்து 'கறுப்புப் பொங்கல்' என்ற தொனிப்பொருளில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மயிலத்தமடுவில் கால்நடைகளுக்கு இழைக்கப்படும் துன்பங்கள் மற்றும் சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பு என்பவற்றை எதிர்த்து கடந்த நான்கு மாதங்களாக பண்ணையாளர்களும், விவசாயிகளும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டங்களின் தொடர்ச்சியாக அவர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி 'கறுப்புப் பொங்கல்' என்ற தொனிப்பொருளில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-26)

## உ/த விவசாய விஞ்ஞானம்: இரு பகுதிகளுக்கும் பரீட்சை

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான விவசாய விஞ்ஞானப் பரீட்சை பெப்ரவரி மாதம் முதலாம் திகதியன்று நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இரு பகுதிப் பரீட்சையும் அன்றையதினம் இடம்பெறும் என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய விஞ்ஞான பரீட்சைக்கான வினாத்தாளின் ஒருபகுதி, பரீட்சைக்கு முன்னரே மோசடியாக வெளியான நிலையில் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி மாற்றுப் பரீட்சை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது விவசாய விஞ்ஞானப் பரீட்சையின் மற்றைய பகுதியும் பரீட்சைக்கு முன்னர் மோசடியாக வெளியாகியுள்ளமை தெரிய வந்துள்ளது. இதையடுத்தே பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முழுப்பரீட்சையும் திரும்ப இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## 13 பிளஸை செயற்படுத்த ஜனாதிபதி ரணில் முயற்சி

### வீரவன்ஸ கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜன. 17

13 பிளஸ் என்பதை வேறுகோணத்தில் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிமரசிங்க முயற்சிக்கின்றார். மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையை இரத்துச் செய்வதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்குச் சென்று கூறிய விடயம் என்ன? மாகாணசபைக்குரிய அதிகாரங்களை முழுமையாகச் செயற்படுத்திக்கொள்ளுங்கள், நான் இடையூறு விளைவிக்கமாட்டேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது அரசமைப்பு மறுசீரமைப்பைச் செய்யுமாறு என்னிடம் கேட்க வேண்டாம், நீங்கள் முதலமைச்சர் நிதியத்தை உருவாக்கிக்கொள்ளுங்கள், என்னால் நியமிக்கப்படும் ஆளுநர் அதற்கு அனுமதி வழங்குவார். அதேபோல பொலிஸ் கொள்கை, காணிக்கொள்கை என்பவற்றையும் செயற்படுத்திக்கொள்ளுங்கள் என்பதே அவரின் உரையின் சாராம்சம்.

விக்னேஸ்வரன் காலத்தில் முதலமைச்சர் நிதியம் உருவாக்கப்பட்டிருந்தாலும் அப்போது இருந்த ஆளுநர் அதற்கு அனுமதி வழங்கவில்லை. ஆளுநர் அனுமதி வழங்காததால்தான் அது மாகாணசபைச் சட்டமாகவில்லை. ஆனால் இதற்குத் தான், இடையூறு விளைவிக்கப்போவதில்லை என்பதையே ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதேவேளை, மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தையும் இரத்துச் செய்வதற்கு முற்படுகின்றார். வடக்கு - கிழக்கில் உள்ள காணிகளில் 40 வீதமானவை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தானவை. அந்த நிறுவனத்தை இரத்துச் செய்த பின்னர், காணிகள் பிரதேச செயலாளரின் கீழ் சென்றுவிடும், பிரதேச செயலாளரை வழிநடத்தும் அதிகாரமும் மாகாண சபைக்கு வழங்கப்பட்டுவிட்டால், 13 பிளஸ் எனக் கூறிக்கொண்டு இருக்க வேண்டியதில்லை. அதிகாரங்கள் சென்றுவிடும்' - என்றார். (அ-ம-44)

லங்கா மஹறால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை.

லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1900/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2290/=
அவுஸ்திரேலியா -2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=



இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து
பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய
மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக
இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை

இந்தியா தொடர்புகளுக்கு:
00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும்
பணத்தினை எம்மிடம் இருந்து
விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
077 8393 974

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A9 வீதியுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- நிலப்பரப்பு
- நல்ல சூழல் நன்னீரூற்று
- நாவற்குழிச் சந்தியிலிருந்து 3/4 Km
- வடமாகாண சபை 300m
- கைதடிச் சந்தி 1Km மெயின்றோட்டுடன் உள்ளது
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(CS 27681) S-1

076 755 8606, 077 129 4999

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 18.12.1950    மறைவு : 25.01.2022

அமரர்
இராசா பூபாலச்சந்திரன் (பூபாலப்பா)

தரணி போற்றும் தலைவனாய்
பாரினிலே வாழ்ந்தவரே
ஈராண்டுகள் ஆனதென்று
அழுதிங்கு புலம்புகின்றோம்
கோடி ஆண்டுகள் ஓடியிங்கு போனாலும்
அழியாது உங்கள் நினைவுகள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

என்றும் நினைவில்
பூபாலப்பா குடும்பத்தினர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org